(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Storm at Rameswaram.

*808 Q.—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) whether a storm hit Rameswaram on 20—7—1971 ; and

(*b*) if so, the details of damage and dislocation caused ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) இல்லை.

(இ) இவ்வினுவுக்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : 20—7—71-ஆக இல்லாமல் இருக்கலாம். அந்த மாதத்தில் அம்மாதிரி ஒரு புயல் அடித்து சேதங்களெல்லாம் ஏற்பட்டதே. அந்த மாதிரி ஏதாவது புயல் அடித்து சேதங்கள் ஏற்பட்டதா ? 1964-ம் வருஷம் புயல் அடித்து பெரிய சேதம் ஏற்பட்டிருக்கிறதே. அடிக்கடி புயலினுல் பாதிக்கப் பட்டு சேதம் ஏற்படுகின்ற ஒரு தீவாக இராமேஸ்வரம் இருப்பதினுல் என்ன பாதுகாப்பு நடவடிக்கை அரசு எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : 20—7—71 புயல் அடித்த தாக பத்திரிகையிலே செய்தி வெளிவந்தது. ஆனுல் புயல் அடித்தது என்பது உண்மை அல்ல. பத்திரிகையில் அப்படி ஒரு செய்தி வந்தது என்பது உண்மை. பத்திரிகையில் மட்டும் புயல் அடித்ததே தவிர உண்மையாக புயல் அடிக்கவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : நான் அறிய விரும்புவதெல்லாம் 1964-ம் வருடம் புயல் அடித்தது என்பது உண்மை. அம்மாதிரியாக இந்தத் தீவில் புயலினுல் பாதகங்கள் ஏற்பட்டால் அதைத் தடுப் பதற்கு மக்களுக்கு பாதுகாப்பான நடவடிக்கை ஏதாவது அரசு எடுக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவர் அவர்களே, புயல் வருகிறது என்று தெரிந்தால். புயல் சின்னம் என்ற ஒரு கொடியை துறைமுகத்தில் நாட்டுகிருர்கள், உயர்த்துகிருர்கள். அதிலிருந்து புயல் சீக்கிரம் வர முடியும் என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தண்டோரா போடுகிருர்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கனம் அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது பத்திரிகையில் மாத்திரம் புயல் அடித்தது என்று சொன்ஞர்கள். தினத்தந்தி பத்திரிகையிலா அல்லது வேறு ஏதாவது பத்திரிகையில் புயல் அடித்ததா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: சொன்னால் வருத்தப்பட மாட்டார்கள் என்று கருதுகிறேன். இந்துப் பத்திரிகையில் வந்திருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன்: புயல் அடிக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். புயல்போன்று ஏதாவது அடித்து, அதனால் ஏதாவது சீர்குலைவு ஏற்பட்டதா? சீர்குலைவை சீரமைப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: புயலினால் சீர்குலைவு ஏற்படவில்லை. காற்று என்பது, காற்று, பெருங் காற்று, புயல், கடும் புயல், என்று நான்கு வகையாகப் பிரிக்கப்படும் அன்று கொஞ்சம் வேகமாக காற்று அடித்தது. எந்தவிதமான சேதமும் ஏற்படவில்லை.

கைக்குத்தல் அரிசி தயாரிப்புத் தொழிற்சாலை

*809 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நமது மாநிலத்தில் கைக்குத்தல் அரிசி தயாரிப்பதற்காக தொழிற்சாலை ஏதேனும் தற்போது உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: கைக்குத்தல் அரிசி தயாரிக்கும் கூட்டுறவுக் கழகங்கள் 129 உள்ளன.

திருமதி த. ந. அனந்தநாயகி: கூட்டுறவுக் கழகங்களெல்லாம் லாபத்தில் நடைபெறுகின்றனவா? கைக்குத்தல் அரிசிக்கு மக்களிடையே அதிக தேவை இருக்கிறது என்று ஏதாவது இந்த அரசாங்கத்திற்கு தெரியவந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, இதில் உள்ள 81 கூட்டுறவுக் கழகங்கள் நஷ்டத்தில் நடைபெறுகின்றன. 25 லாபத்தில் நடைபெறுகின்றன.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, in view of the fact that handpounded rice is supposed to be healthier, is there any proposal with the Government to encourage hand-pounding by co-operative societies and arranging marketing organisations so that people will know where to buy and how to get it?

The Hon. THIRU SI. PA. ADITANAR: Sir, most of the handpounded rice is now not sold to the public; it is sold to the jails, hospitals and hostels; at the moment, the requirements of jails, hospitals and hostels are being met by the hand-pounding of paddy societies.